திரு. நா. வீராசாமி : இன்று நம்முடைய அரசாங்கத்தில் இருந்து தான் ஐ.ஸி.எஸ்., ஐ.ஏ.எஸ். அதிகாரிகளுக்கு சம்பளம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் அவர்கள் தவறு செய்தால் தண்டிக்கின்ற அதிகாரம் நமக்கில்லை. டிரான்ஸ்பர்தான் செய்யலாம். அத்தகைய அதிகாரமும் நமக்குக் கொடுக்கப்படவேண்டும் என்று மத்திய அரசாங் கத்தை நமது அரசு வற்புறுத்துமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இதற்காகத்தான் நாம் நம் கொள்கைகளை முழங்கி வருகிறோம்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : சார் ஐ.ஸி.எஸ். அதிகாரிகளுக்கு என்று சில தனிச் சலுகைகள் உண்டு. அந்தச் சலுகைகளை ஐ.ஏ.எஸ். அதிகாரிகளுக்கும் அளிக்க நம் அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : எந்த அரசு என்பது புரிய வில்லை.

***695 Q.—THIRU N. DENNIS :** Will the Hon. the Chief Minister be pleased to state —

(*a*) the number of retired I.C.S. Officers now re-employed in State service ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) ஒருவர்.

(இ) திரு டி. ஏ. வர்கீஸ், ஐ.ஸி.எஸ். (ஓய்வு பெற்றவர்) சென்னை. நிர்வாகச் சீர்திருத்த ஆணைக் குழுவின் தலைவராக மாநில அரசினால் மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார்.

திரு. என். டென்னிஸ் : இதுபோன்று ஓய்வு பெற்ற ஐ.ஸி.எஸ். அதிகாரிகளைப் போடாது குறிப்பிட்ட துறையில் உள்ள நிபுணர்களை நியமிக்க அரசு யோசிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அதில் மற்ற நிபுணர்களும் இருக்கிறார்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி : சீக்கிரத்தில் பரிசீலித்து முடிவு செய்யப் படவேண்டிய ஒரு குழுவுக்கு ஓய்வுபெற்ற அதிகாரியைப் போடுவதால் அப்படியே அதை நீடித்துக்கொண்டு போகக்கூடுமே, அப்படியின்றி சர்வீஸில் உள்ள திறமைசாலிகளைப் போடுவார்களா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நாம் சீக்கிரத்திலேயே ஒரு அறிக்கை அளிக்கப்படவேண்டும் என்று வற்புறுத்தியிருக்கிறோம். நீண்ட காலம் நீட்டிக்கொண்டு போவார் என்று நினைப்பதே தவறு.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : சார், ஓய்வுபெற்ற ஐ.ஸி.எஸ். அதிகாரி திரு வர்கீசையே நாம் எல்லாத் தலைமைக்கும் போட்டுக் கொண்டிருக்கிறோமே, வேறு தகுதி வாய்ந்த ஆபீஸர்கள் இல்லையா ? இவரை மாற்றி வேறு யாரையாவது அரசு போடக் கூடாதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இப்போது நிரவாகச் சீர்திருத்த ஆணைக்குழுவின் பணிகள் பாதிக்குமேல் நடைபெற்றுவிட்டன. இப்போது போய் அவரை மாற்றினால், நிர்வாகச் சீர்திருத்தத்திற்குப் பதில் நிர்வாகச் சீர்குலைவாக அது ஆகிவிடும்.

திரு. வை. பாலசுந்தரம் : ஐ.ஏ.எஸ். அதிகாரிகளாக தமிழ் தெரியாத வர்களைப் போட்டு விடுகிறார்கள். அதன் காரணமாக ஆங்கிலமே தெரியாத வர்களிடம் அவர்கள் தவிக்கின்ற நிலை இருக்கிறது. ஆகவே தமிழ் தெரிந்தவர்களைத்தான் போடவேண்டும் என்பார்களா அல்லது இவர்கள் தமிழ் கற்றுத்தான் ஆகவேண்டும் என்று செய்வார்களா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : வெளி மாநிலங்களில் இருந்து இங்கே ஐ.ஏ.எஸ். அதிகாரியாக வருகிறவர்கள் தமிழைக் கற்றுக்கொள்ள வேண்டுமென்ற நியதி இருக்கிறது. தமிழ் நன்றாகக் கற்றுக்கொண்டி ருக்கிறார்கள். இன்னும் பொது நிகழ்ச்சியில் கூட முன்பெல்லாம் ஆங்கிலத்தில் பேசியவர்கள் நான்காண்டு காலமாக நல்ல தமிழில் பேசி தங்கள் கருத்துக்களைத் தெரிவித்து வருகிறார்கள்.

திரு. ஏ. எம். இராஜா : ஐ.ஸி.எஸ்., ஐ.ஏ.எஸ். அதிகாரிகளுக்குப் பதிலாக நம் மாநில சர்வீசுக்கு நாமே டி.ஏ.எஸ். **Tamil Nadu Administrative Service** என்பதாக ஏற்படுத்தி தேர்வு பெறுகிறவர்களை நியமிக்க முன்வருவார்களா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இவை எல்லாம் விரைவில் ஆகக் கூடிய காரியங்கள் அல்ல. கருத்துக்களை ஆராய்ச்சி செய்திடல் வேண்டும்.

திரு. எம். முத்தையா : ஓய்வுபெற்ற ஐ.ஸி.எஸ். அதிகாரியை நியமிக்கும்போது பென்ஷன் தொகைதான் ஊதியமாகப் பெறுகிறாரா? தனியே அதிக ஊதியம் தரப்படுகிறதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அவருக்குத் தனியாக ஊதியம் அளிக்கப்படுகிறது.

பல்லடம் வட்டத்தில் சமுதாயக் கிணறுகள்

*696 **வினா—திரு. கே. என். குமாரசாமி :** மாண்புமிகு கல்வி—உள் ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் வட்டத்தில் உள்ள ஊராட்சி ஒன்றியங்களிடமிருந்து சமுதாயக் கிணறுகள் வெட்டக் கோரி விண்ணப்பங்கள் ஏதேனும் அரசுக்கு வந்தனவா ?